

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.9.2024) முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக

# கே.ஆர். ஸ்ரீராம் பதவியேற்றுக் கொண்டார்!

### ஆளுநர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்!

*சென்னை, செப். 29-* சென்னை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த ஆர். மகாதேவன் உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து, மும்பை உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியாக இருந்த கே. ஆர். ஸ்ரீராமை, சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரைத்தது.

அதன்படி, நியமிக்கப்பட்ட கே.ஆர். ஸ்ரீராம், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் ஆர். என்.ரவி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

தலைமை நீதிபதி கே. ஆர்.ஸ்ரீராம், மும்பை பல்கலைக்கழகம் மற்றும் லண்டனில் சட்டம் பயின்றவராவார்.

பதவியேற்பு நிகழ்ச்சியில், முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி இந்திரா பானர்ஜி, உயர்நீதிமன்ற நீதிபதிகள், சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, க.பொன்முடி, ரகுபதி, கேரள மாநில முன்னாள் ஆளுநர் சதாசிவம், சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பாசிஸ்ட்டுகளின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைக்கு எதிராக, முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அவர்களுக்கு, உச்சநீதிமன்றம் பிணை வழங்கியுள்ள நிலையில், 471 நாட்கள் சிறைவாசம் முடித்து, வெளியே வந்திருக்கும் அவரை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்று வாழ்த்தினார்.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் அடுக்குமாடி குடியிருப்புகளில்

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருள்கள் விற்பனை!

### அபார்ட்மெண்ட் பஜார் துவக்கம்!

*சென்னை, செப்.29-* தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட ஏதுவாகவும், நகர்ப்புற மக்கள் மத்தியில் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை பிரபலப் படுத்திடவும் 25 அடுக்கு மாடி குடியிருப்புகளில் கண்காட்சிகள் நடத்தப் படும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவிக்கப் பட்டது.

அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்திடும் வகையில் 27.09.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், படூரில் உள்ள ஹிராநந்தானி அடுக்கு மாடி குடியிருப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திடும் அபார்ட்மெண்ட் பஜார் துவக்கப்பட்டுள்ளது.

27.09.2024 மற்றும் 28.09.2204 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த அபார்ட்மெண்ட் பஜாரில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களைக் கொண்ட 20 அரங்குகளில் நவராத்திரி பண்டிகைக்கு தேவையான கொலு பொம்மைகள், பூஜை பொருட்கள், பரிசு பொருட்கள், பாரம்பரிய அரிசி வகைகள், கைவினைப் பொருட்கள், கைத்தறி துணி வகைகள் போன்ற அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப் பட்டன.

மேலும் வாடிக்கையாளர்களுக்கான பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புகளை அனைத்துத் தரப்பினரும் வாங்கி, அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு உதவினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி பயிற்சி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி நடத்திய **‘என் உயிரினும் மேலான..!’** என்ற பிரமாண்ட பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். முதல் கட்டமாக, மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு திராவிட இயக்கப் பேச்சாளர்களைக்கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
29.09.2024 ஞாயிறு அன்று நடைபெறும் இந்தப் பயிற்சி முகாம் குறித்த விவரம் வருமாறு:

**29-09-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியாளர்கள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | ஜெயின் மகளிர் கல்லூரி, பேருந்து நிலையம் அருகில், தியாகராய நகர், சென்னை-17. | கோவி.செழியன், மருத்துவர் எழிலன், கோவி.லெனின், மருத்துவர் யாழினி, ஜீவசகாப்தன் | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், புதுச்சேரி | சூர்யா கல்விக் குழும கல்லூரி, விக்கிரவாண்டி, விழுப்புரம்-52. | பொன். முத்துராமலிங்கம், மதுரை பாலா, சுகுணா திவாகர், டான் அசோக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர் | எ.வ.வேலு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் நகர், திருவண்ணாமலை-1. | நாஞ்சில் சம்பத், சி.வி.எம்.பி.எழிலரசன், உமா, சௌமியன், மகிழ்நன் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | வழக்கறிஞர் அருள்மொழி, வே.மதிமாறன், அமுதரசன், பத்மப்ரியா, செந்தில்வேல், தமிழ் காமராசன் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, நீலகிரி, ஈரோடு | மகரிஷி வித்யா மந்திர் பள்ளி, ஈங்கூர், பெருந்துறை, ஈரோடு-52. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வழக்கறிஞர் சரவணன், மதிவதனி, இந்திரகுமார் தேரடி, பொள்ளாச்சி சித்திக் | கே.இ.பிரகாஷ் |
| 6 | அரியலூர், பெரம்பலூர், திருச்சி, திருவாரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், காரைக்கால் | கரந்தை தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-கும்பகோணம் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை நகர், தஞ்சாவூர்-2. | முனைவர் சபாபதி மோகன், கவிதைப்பித்தன், வழக்கறிஞர் பரந்தாமன், மருத்துவர் ஹபீஸ், விஜயபாஸ்கர் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை | அமெரிக்கன் கல்லூரி, அழகர் கோவில் பிரதான சாலை, தல்லாக்குளம், மதுரை-20. | கம்பம் செல்வேந்திரன், டி.செங்குட்டுவன், புதுக்கோட்டை விஜயா, மருத்துவர் ஷஃபி சுலைமான், சூர்யா சேவியர், மில்டன் | ஜி.பி.ராஜா |
| 8 | திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி | கீதாஜீவன் மெட்ரிகுலேஷன் பள்ளி, போல்பேட்டை, புதிய பேருந்து நிலையம் அருகில், தூத்துக்குடி-2. | கடலூர் புகழேந்தி, எஸ்.கே.பி.கருணா, கவிஞர் சல்மா, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, வரவணை செந்தில், ராஜகம்பீரன் அப்பாஸ் | இன்பா ஏ.என்.ரகு |

**பயிற்சியில் கலந்துகொள்வோர் கவனத்திற்கு**

* பயிற்சியில் கலந்துகொள்ள வருபவர்கள், கல்லூரி / அலுவலக அடையாள அட்டை, ஆதார் கார்டு போன்ற ஏதேனும் ஓர் அடையாள அட்டையை எடுத்து வர வேண்டும். * பயிற்சி காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும். * காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. * பயிற்சி தொடங்கும் நேரத்தில் பங்கேற்பாளர்கள் அரங்கத்தில் இருக்கவேண்டும்.
* பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தங்களுடன் பெற்றோர் அல்லது உறவினர் ஒருவரை துணைக்கு அழைத்து வரலாம்.

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 25–09–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி